**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 80/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(மருதுபாண்டி)**
**25.6.2024**

**7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து முருகனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். முருகனுக்கு கணபதி மற்றும் உலகநாதன் என்ற 2 வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கணபதி பெயரில் பட்டா ஏற்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் இல்லை இரண்டு பேருக்கும் கூட்டாக உள்ள சொத்தாகும். அவ்வாறு இரண்டு பேர் பெயரிலும் உள்ள கூட்டு பட்டா உள்ளதா என்றால் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்துக்கள் யார் பெயரில் இருந்தது என்றால் கணபதி பெயரில் இருந்தது. கணபதி பெயரில் எத்தனை வருடங்களாக பட்டா உள்ளது என்றால் 2009 ம் வருடத்தில் அவர் மாற்றியுள்ளார் அதற்கு முன்பு எனது தாத்தா பெயரில் இருந்தது. அவ்வாறு எனது தாத்தா பெயரில் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் முருகனுக்கு எத்தனை அயிட்ட சொத்துக்கள் என்றால் 7 அயிட்ட சொத்துக்கள். அந்த 7 அயிட்ட சொத்துக்களில் உலகநாதன் பெயரில் தனிபட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். கணபதியின் மனைவி பெயர் மஞ்சுளா. தாவா சொத்துக்களில் 1 அயிட்ட சொத்தை 7 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு அவர் கிரையம் வாங்கும் போது அந்த சொத்து கணபதி பெயரில் இருந்தது என்றால் சரிதான். எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளபடி முருகன் பெயரில் எந்தெந்த சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் புஞ்சை சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த சொத்துக்களை வழக்கில் சேர்த்துள்ளோமா என்றால் சேர்த்துள்ளோம். தாவா 3 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் அவர்களது கூட்டு உழைப்பில் வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். அவ்வாறு கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்களின் பதிவு நகல் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களில் பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் 1,2 அயிட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் ஆகும். அவை மானாவரி நிலங்கள் என்றால் சரிதான். முருகன் விவசாய கூலி வேலை செய்துவந்தார் என்றால் சரிதான். தாவா 1,2 அயிட்ட சொத்துக்களில் விவசாயம் செய்திருந்தால் வீட்டிற்கு தேவையான அளவு மட்டுமே வருமானம் கிடைத்திருக்கும் என்றால் சரிதான்.

**(7,8 பிரதிவாதிகளின் வழக்கறிஞர்களின் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)**